மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் மொத்த மோசடி 12 லட்சம் ரூபாய் அல்ல. 7,42,374 ரூபாய் மோசடி செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் இருக்கிறது. அதிகாரிகள் இதில் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்கள்மீதும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொண்ட நெல்லை ரைஸ் மில்காரர்கள் பூரணமாக அரைத்து குறிப்பிட்ட சதவிகித அரிசியைக் கொடுத்தார்களா? அப்படிக் குறிப்பிட்ட சதவிகித அளவு கொடுக்காமல் எத்தனை ரைஸ் மில்காரர்கள் இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அரசாங்கத்திடமிருந்து நெல்லைப் பெற்றுக்கொண்டு, அரைத்து, அரிசியாக மாற்றி இத்தனை சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று ரைஸ்மில்காரர்களுக்கு கூறப்பட்டிருக்கிறது. 64.5 சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக 64 சதவீதம் என்று வைத்தோம். அந்த அளவு கொடுக்காமல் குறைவாகக் கொடுத்தார்கள். அரசாங்கத்தின் சார்பில் இருக்க வேண்டிய ஸ்டாக்கும் இல்லாமல் குறைந்திருந்த காரணத்தினால்தான் கைது செய்யப்பட்டார். மொத்தம் குறிப்பிட்ட சதவிகித அளவு கொடுக்காத நபர்கள் எத்தனை பேர்கள் என்று கேட்டார்கள். அந்த எண்ணிக்கை பற்றிய தகவல் என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. மு. ச. சிவசாமி: தலைவர் அவர்களே, இந்த அரிசி ஆலை உரிமையாளர் யார் என்பதை இந்த மன்றம் அறியலாமா? யார் பொறுப்பில் கைது செய்யப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, கைது செய்யப்பட்டவருடைய பெயர் திரு. ஓ. எஸ். சண்முகவேலு. அவர் உயர்நீதிமன்றத்தால் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

விருதுநகர் பள்ளிகளில் மதிய உணவுக்கான அரிசி

*** 542 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு உணவு, வரி-வணிகத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரில் 1968 ஆகஸ்ட் மாதத்தில், பள்ளிகளில் மதிய உணவுக்காகப் போடப்பட்டு வந்த அரிசி நிறுத்தப்பட்டதா?

(இ) ஆம் எனின், அதன் காரணம் என்ன?

(உ) அதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

(அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

1970 மார்ச் 25]

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, விருதுநகரில் பள்ளிகளில் மதிய உணவுக்காகப் போடப்பட்ட அரிசி நிறுத்தப் பட்டதா? அந்தக் குறிப்பிட்ட மாதத்தில் இல்லாமல் போனாலும், அதற்கு முன்னாலாவது அல்லது பின்னாலாவது போடப்பட வில்லையா? ஆம் என்றால் என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலின்படி ஆகஸ்ட் மாதத்தில் 75 குவிண்டால் அரிசி அந்த ஊராட்சிமன்றங்களுக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. மற்ற விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

பால்பொடி தயாரிப்பு

*543 வினா—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பால்பொடி (Milk Powder) தயார் செய்யும் தொழிற் சாலை ஒன்று மதுரை பால் பண்ணையில் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

ஆம்.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பால்பவுடர் தொழிற்சாலையை அமைக்கப்போவது சர்க்கார் துறையிலா அல்லது தனியார் துறையிலா? இதற்கான கெபாசிட்டி என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, சர்க்கார்தான் தொடங்க இருக்கிறது. இதற்கு மொத்தம் 21 லட்சம் ரூபாய் செலவாகும்.

Firing of pellets near Puduchattiram

*529 Q.—THIRU N. S. V. CHITHAN:
THIRU R. KARUPPIAH: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Deputy Inspector-General of Police, C.I.D., enquired into the firing of pellets near Puduchattiram about 29th October 1969; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:

(அ) ஆம்.

(இ) முயல் வேட்டையாடிப் பழக்கப்பட்ட அப்பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர், இந்த நிகழ்ச்சிக்குக் காரணமாயிருந்தார் என்று புலனாய்விலிருந்து தெரியவந்தது. அவர், ஒரு முயலைக் குறிவைத்துக் கொண்டிருந்தபோது, திருச்சிராப்பள்ளி செல்லும் 153 எண் விரைவு ரயில் வண்டி அவ்வழியைக் கடந்து சென்றது.